தலைப்புச் செய்திகள்

- வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தனி கட்டமைப்பை, சர்வதேச நிதிநிறுவனங்கள் உருவாக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

- தீவிரவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க உறுதியான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

- உலகின் இரண்டாவது பெரிய மின்னணு ஏற்றுமதி நாடாக இந்தியாவை உயர்த்த உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

- ஆப்கானிஸ்தானுக்கு 5 டன் மருந்துப் பொருட்களை மனிதாபிமான அடிப்படையில் இந்தியா வழங்கியுள்ளது.

- இலங்கையில் நடைபெற்று வரும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா-ஏ அணி இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தை மேம்படுத்த சர்வதேச நிதி நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

பிரான்ஸ் நாட்டின் Evian நகரில் நடைபெற்று வரும் ஜி-7 உச்சி மாநாட்டில் உரையாற்றிய பிரதமர், வளர்ந்து வரும் நாடுகளுக்கு உதவுவதற்கென தனி கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா மற்றும் பசிபிக் தீவு நாடுகளை இணைப்பதற்கான போக்குவரத்து கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

உள்ளார்ந்த பொருளாதார வளர்ச்சி, மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, அனைவரின் பங்களிப்போடும், ஒத்துழைப்போடும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

உள்ளார்ந்த பொருளாதார வளர்ச்சியை அனைத்து தரப்பு மக்களும் பெற வேண்டும் என்ற தலைப்பில் திரு. நரேந்திர மோடி உரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில் G-7 நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் நட்பு நாடுகள், சர்வதேச செலாவணி நிதியம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

G-7 உச்சி மாநாட்டை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, அமெரிக்க அதிபர் திரு. டோனால்ட் ட்ரம்ப்பை சந்திக்கவுள்ளது உலக அரசியலில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

>>>>>><<<<<<

G-7 உச்சி மாநாட்டை ஒட்டி, ஜெர்மன் பிரதமர் Friedrich Merz-ஐ சந்தித்து, பிரதமர் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தினார்.

இந்த சந்திப்பு குறித்து தமது சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், ஜெர்மன் பிரதமருடன் தாம் நடத்திய பேச்சுக்கள் ஆக்கபூர்வமாக அமைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

வர்த்தகம், முதலீடு, பொருளாதாரம், பாதுகாப்பு, தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்தியதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா – ஜெர்மன் இடையிலான கலாச்சார உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் தாம் விவாதித்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

தீவிரவாதத்துக்கு எதிராக இந்தியா உறுதியான நடவடிக்கை எடுத்து வருவதாக பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை மூலம், தீவிரவாதத்துக்கு எதிராக வலுவான நடவடிக்கையை எடுத்துள்ளதாக கூறியுள்ளார்.

இந்தியாவின் இறையாண்மைக்கு எதிரான தீவிரவாத செயல்களுக்கு பதிலடியாக நமது ராணுவம் தீவிரவாதிகளுக்கு எதிராக துல்லிய தாக்குதல் நடத்தியதாக தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில், நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பாதுகாப்புத் துறையில் சுயசார்பு இந்தியா திட்டத்தை செயல்படுத்தும் வகையில், ராணுவ தளவாடங்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 12 ஆண்டுகளாக நாட்டின் பாதுகாப்புக்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாக திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்த மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கடந்த 12 ஆண்டுகளாக பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு எதிரிகளின் தாக்குதலிருந்து நாட்டை பாதுகாக்க உறுதிபூண்டுள்ளதாக கூறியுள்ளார்.

எல்லைதாண்டிய தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை, ஆபரேஷன் சிந்தூர், நக்சல் தீவிரவாதத்தை ஒழிப்பது, உள்நாட்டு பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

பிரதமரின் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான வேலைவாய்ப்பு திட்டத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி, 2 ஆயிரத்து 400 கோடி ரூபாய் நிதியுதவியை வரும் வெள்ளிக்கிழமை புதுதில்லியில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் வழங்கவுள்ளார்.

வேலைவாய்ப்பை உருவாக்குவது, நிரந்தர வேலைவாய்ப்புகள் சமூக பாதுகாப்பை உறுதி செய்வது போன்ற நோக்கங்களுடன் மத்திய அரசு இந்த திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

நாட்டில் இதுவரை 15 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்றுள்ளனர்.

பிரதமரின் வேலைவாய்ப்புடன் இணைந்த சலுகைத் திட்டப் பயனாளிகளுக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை உதவித்தொகை வழங்கப்படுகிறது.

திறன் மேம்பாட்டுப் பயிற்சியை வெற்றிகரமாக முடிக்கும் இளைஞர்களுக்கு மாதந்தோறும் மூவாயிரம் ரூபாய் கூடுதலாக இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

உற்பத்தி துறையில் பணியாற்றும் இளைஞர்களுக்கு 4 ஆண்டுகளுக்கும், இதர துறைகளில் பணியாற்றுபவர்களுக்கு 2 ஆண்டுகளுக்கும் இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது.

>>>>>><<<<<<

உலகிலேயே ஆறாவது மிகப்பெரிய மின்னணு ஏற்றுமதி நாடாக இந்தியா திகழ்வதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மகாராஷ்ட்ரா மாநிலம் புனேயில் அமெரிக்க தொழில் நிறுவனத்தின் புதிய உற்பத்தி பிரிவை தொடங்கிவைத்து பேசிய அவர், இந்தியா மின்னணு சாதன உற்பத்தி மையமாக உருவெடுத்துள்ளதாக கூறினார்.

உலகிலேயே இரண்டாவது மிகப்பெரிய மின்னணு ஏற்றுமதி நாடாக இந்தியா மாறுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

நாட்டில் இரண்டு செமி கண்டெக்டர் தொழிற்சாலைகளை அமைத்து வருவதாக கூறிய அமைச்சர், இந்த ஆண்டு இறுதிக்குள் நான்கு தொழிற்சாலைகள் அமைக்கப்படும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மகாராஷ்ட்ரா முதலமைச்சர் திரு தேவேந்திர ஃபட்நவிஸ், டிஜிட்டல் கட்டமைப்பு வளர்ச்சியில் மகாராஷ்ட்ரா முன்னணி மாநிலமாக திகழ்வதாக குறிப்பிட்டார்.

மும்பை – அகமதாபாத் புல்லட் ரயில் சேவை தொடங்குவதன் மூலம் நாட்டின் மிகப்பெரிய பொருளாதார வழித்தடம் ஏற்படும் என்று அவர் கூறினார்.

வாத்வான் துறைமுகம் விரைவில் அமைக்கப்படும் என்று கூறிய திரு தேவேந்திர பட்நவிஸ், உலகிலேயே மிகப்பெரிய துறைமுகங்களில் ஒன்றாக இது திகழும் என்றும் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள Beas ரயில் நிலையம் 61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்று ரயில்வே இணையமைச்சர் திரு Ravneet Singh தெரிவித்துள்ளார்.

அம்ரிட்சர் – Katra வந்தேபாரத் விரைவு ரயில் சேவையை கொடியசைத்து தொடங்கிவைத்து பேசிய அவர், இந்த ரயில் குருதாஸ்பூர் வழியாக இயக்கப்படும் என்று தெரிவித்தார்.

புனித நகரங்களான அம்ரிட்சரையும், ஸ்ரீ மாதா வைஷ்ணோ தேவி கோவில் தலத்தையும் இந்த ரயில் இணைக்கும் என்று அவர் கூறினார்.

>>>>>><<<<<<

ஆப்கானிஸ்தான் நாட்டுக்கு ஐந்து டன் அத்தியாவசிய மருந்துகளை இந்தியா வழங்கியுள்ளது.

வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆப்கானிஸ்தான் நாட்டு மக்களின் நலனுக்காக இந்தியா தொடர்ந்து உதவி அளித்து வருவதாக தெரிவித்துள்ளது.

அந்நாட்டு மக்களுக்கு மனிதநேய அடிப்படையில் இந்தியா தொடர்ந்து உதவி அளிக்கும் என்றும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

>>>>>><<<<<<

இலங்கையில் நடைபெற்று வரும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா-ஏ அணி 101 ரன் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தான்-ஏ அணியை வென்று இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

தம்புலாவில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற ஆப்கானிஸ்தான்-ஏ அணி முதலில் பந்து வீச தீர்மானித்தது.

இதையடுத்து பேட் செய்த இந்தியா-ஏ அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 319 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக திலக் வர்மா 59 ரன் எடுத்தார்.

320 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த ஆப்கானிஸ்தான்-ஏ அணி 36 புள்ளி ஐந்து ஓவரில் 218 ரன் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தது.

>>>>>><<<<<<

உலக கோப்பை Pickleball போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

18 வயதுக்குட்பட்டோருக்கான அணியின் கேப்டனான அர்ஜூன் சிங்கும், 14 வயதுக்குட்பட்டோருக்கான அணியின் கேப்டனான Beer Shah-வும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இப்போட்டி, வியட்நாமில் ஆகஸ்ட் மாதம் 30ஆம் தேதி தொடங்கி, செப்டம்பர் மாதம் 6ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

பிரான்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச பாரா பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Nithesh - Thulasimathi Murugesan இணை மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

உலக கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் Deepak அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 70 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் ஜப்பானின் Okazawa Sewon-ஐ வென்றார்.

>>>>>><<<<<<

ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா இன்று ஜெர்மனியை எதிர்கொள்கிறது.

Rotterdam-ல் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு 11 மணிக்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<

Macau ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Shriyanshi Valishetty காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-18, 19-21, 21-15 என்ற செட்கணக்கில் இந்தியாவின் Tasnam Mir-ஐ வென்றார்.

>>>>>><<<<<<

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியின் நீச்சல் பிரிவில் பங்கேற்க இந்தியாவின் ஸ்ரீஹரி நட்ராஜ் தகுதி பெற்றுள்ளார்.

>>>>>>END<<<<<<